1994 மார்ச் 18]

மிகப் பெரிய அளவில் பயன் உள்ளதாக இருக்கும். ஆகையினாலே அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்த நடப்பு ஆண்டிலேயாவது அதற்கு எஸ்டிமேட் தயார் செய்து-மத்திய அரசிடம் கூட கேட்கலாம்-பணம் ஒதுக்கி அந்த வேலைகளைத் துவங்குவதற்கு முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல அந்தப் பேரவையினுடைய பொறுப்பு பொதுப்பணித் துறையில் இருக்கிறது. பாலம் கட்ட வேண்டிய பொறுப்பு நெடுஞ்சாலைத் துறையிடம் இருக்கிறது. ஆகவேதான் பொதுப்பணித் துறையினர் அந்தப் பாலம் கட்டலாம் என்று நெடுஞ்சாலைத் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து அதற்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்றுதான் அரசு கருதுகிறது. அதற்கான புரபோசல் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

28—

கோழிப் பண்ணைக்கு இலவச மின்சாரம் வழங்குதல்.

* 16438—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத்திற்கு இலவச மின்சாரம் அளிப்பதைப் போல் கோழிப் பண்ணைக்கும் இலவச மின்சாரம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழிப் பண்ணை என்பது அண்டை மாநிலமான ஆந்திரத்தோடு தமிழகம் போட்டி போட முடியாத அளவுக்கு அங்கு தீவனத்தினுடைய விலை குறைவாக இருக்கிற காரணத்தால் தமிழகத்திலே இருக்கிற பண்ணைகள் அவற்றோடு போட்டி போட இயலவில்லை. அங்கே போதிய வருமானம் இல்லாத நிலைமை இருக்கிற காரணத்தால், இலவசமாக மின் சாரம் கொடுக்க முடியாவிட்டாலும், இண்டஸ்டிரியல் பீட ருக்கு அடுத்த கட்டமாக அதை டாரிப் செய்ய வேண்டும் என்றும் அதை கொடுக்க முடியுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைகளில் அதிக விளக்கு களைப் பயன்படுத்துகிறார்கள்; ஆகவே மின்சார உபயோகப் படுத்துகின்ற தன்மை அதிகமாக இருக்கிறது. பொதுவாக கோழிப் பண்ணைகளுக்கு மின் அழுத்த கட்டண விகிதம் 4-ன்படிதான் கட்டணம் வசூலிக்கிறோம். மிகக் குறைந்த அளவிலேதான் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு இணைப்புக்கு மாதம் 30 ரூபாய் அல்லது 2 மாதத்திற்கு 60 ரூபாய் என்ற அளவிலே தான் வசூலிக்கப்படுகிறது. இதுபோன்ற குறைந்த கட்டணம் இருக்கிற நேரத்திலே இப்போது இருக்கிற மின்சார உற்பத்தி யினுடைய விலை உயர்வைப் பொறுத்த மட்டிலே இந்த அரசி னிடத்திலே அப்படிப்பட்ட குறிப்பு இல்லை என்றாலும் உறுப் பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கவனத்தோடு பரி சீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழிப் பண்ணை என்பது சேலம் மாவட்டம், பெரியார் மாவட்டம் போன்ற இடங்களில், வடகிழக்கு பருவக் காற்று, தென்மேற்குப் பருவக் காற்று போன்ற எதனாலும் மழை இல்லாத மாவட்டங்களாக இருக்கிற காரணத்தால், வறண்ட பிரதேசமாக இருக்கிற காரணத்தால் அங்கே அதிகமாக கோழிப் பண்ணையை வைத்து நடத்துகிறார்கள். சிறுசிறு பண்ணைகள் வைத்து அதன் மூலம் அண்டை மாநிலங்களான கர்நாடகா மாநிலம் கேரள மாநிலம் போன்றவைகளுக்கு முட்டை கள் அனுப்பப்படுகின்றன. இதை நிறைய குடும்பங்கள் வைத்துக் கொண்டு வாழ்ந்துக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அதற்கு இண்டஸ்டிரியல் பீடருக்கும் விவசாயத்திற்கும் இடைப் பட்ட டாரிப் நிர்ணயித்தால் இந்த இரண்டு மாவட்டத்து மக்களும் சிறு சிறு கோழிப் பண்ணை வைத்திருப்பவர்கள் பெரிதும் பயன் அடைவார்கள். இதன் மூலமாகத் தமிழகத்திற்கு வேறு வகையிலே வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்தச் சலுகையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1994 மார்ச் 18]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழிப் பண்ணைக்கு மின் கட்டணம் வசூலிக்கிறபோது 750 யூனிட்டுகளுக்கு கீழே உபயோகிக்கின்றவர்களுக்கு ஒரு தொகையும் அதற்கு மேலே அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு ஒரு தொகையும் அவர்களுடைய உபயோகிக்கும் தன்மையைப் பொறுத்து வசூலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே குறைந்த அளவிலே உபயோகிப்பவர்களுக்கு சலுகை இருக்கிறது. நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல ஒரு விரிவான அறிக்கையை மின்சார வாரியத்திடம் இருந்து பெற்று எவ்வளவு வருவாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்ற வகையிலே கணக்கு எடுத்துத்தான் அதற்குத் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க முடியும். ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பற்றி அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

முற்பகல் 10-40

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை என்பது எல்லாம் பண்ணை என்று வருகிற போதே அரசு வேளாண்மையோடு நேரிடையாக தொடர்பு கொண்டுள்ள ஒரு தொழில் தான், விவசாயிகளே தங்களுடைய தோட்டத்தில் செய்கின்ற தொழில்தான் இந்த கோழிப் பண்ணையும். எனவே, விவசாயத்திற்கு இலவசமாக கொடுக்கின்ற போது இந்தச் கோழிப் பண்ணைக்கு குறைந்த பட்ச மின் கட்டணமாக குறைத்து போடலாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே சிறு பம்ப் செட்டுகளிலேயிருந்து கோழிகளுக்கு தண்ணீர் குடிப்பதற்கு நேரிடையாக பைப் கனெக்ஷன் கொடுத்து எடுத்துச் சென்றால், அதற்கு மின்சார வாரியத்தினர் வந்து அபராதம் விதிக்கிறார்கள், அதற்கு தொகை விதிக்கிறார்கள்.

கோழி தண்ணீர் குடிப்பது என்பது மிகக் குறைந்த அளவு தான் இருக்க முடியும். இந்த கோழிப் பண்ணைக்கு தண்ணீர் நேரடியாக எடுத்துச் செல்லாமல் குடங்களில் கொண்டு போய் ஊற்றினால் அதற்கு கட்டணம் விதிப்பதில்லை, அதனால் இப்போது ஆள் போட்டு குடங்களில் தண்ணீர் ஊற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இந்தக் கோழிப் பண்ணைக்கு விடுகின்ற தண்ணீரையாவது அந்த இலவச மின்சார பம்ப் செட்டுகளிலிருந்து விடுவதற்கு மின்சார வாரியம் இலவசமாக அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 மார்ச் 18

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தியாவிலே இலவச மின் சாரம் கொடுக்கின்ற ஒரே மாநிலம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆளுகின்ற நம் மாநிலம் தான். இதிலே தொள்ளாயிரம் கோடி ரூபாய் ஏற்கனவே நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. ஆக இன்றைக்கு தண்ணீர் கொடுக்கின்ற பிரச்சினை என்பது அவர் சொல்வதைப் போல கோழிகள் கொஞ்சமாகத் தண்ணீர் குடிக்கும்போது குடத்திலே ஊற்றலாம். ஆனால் மின் இணைப்பு என்று வருகின்றபோது, விவசாயம் என்று குறிப்பிட்டு சொன்னால் அந்த மின் இணைப்புக்கு மட்டும் தான் இலவசமாகக் கொடுக்க முடியும். மற்ற தன்மைகளுக்கு பயன்படுத்துகின்ற போது அந்த பிரிவின்கீழ் வரமுடியாது. ஆகவே அதற்கு இலவச மின்சாரம் தர முடியாது. அதற்கு விதி முறைகளும் அனுமதிக்காது. ஆகவே, விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்ப தோடு இப்படிப்பட்ட நிலைகளை ஒப்பிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோழிப்பண்ணை தொழில் நாமக்கல் பகுதி யில் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக ஏழை எளிய விவசாயி களுக்கு குடிசைத் தொழிலாக அது பயன்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொள்ளாயிரம் கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எத்தனையோ இன் னல்களைத் தாங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு நாமக்கல்பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பகுதியையாவது எடுத்து அங் குள்ள சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சலுகை கொடுக்கின்றபோது ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு, அந்தத் தொழிலுக்கு என்று கொடுக்க வேண்டுமென்றால் அதற்கெல்லாம் விதிமுறைகளைத் தளர்த்தி உரிய உத்தரவுகளைப் பெற வேண்டும். பொதுவாக கோழிப் பண்ணைகளுக்கு நாம் குறைந்த அளவிலே தான் மின் கட்டணம் நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல வசூலிக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அர்ச்சுனன் கேள்விக்கு பதிலளிக்கின்ற போது இது சம்பந்தமாக முழு விவரங்களையும் நாம் ஆய்வு செய்ய வேண்டும் என்று ஏற்கனவே சொன்னேன். எத்தனை யூனிட்டுகள் இருக்கின்றன ? எவ்வளவு உபயோகிக்கிறார்கள் என்பதை எல்லாம் பார்த்து அதிலே ஏதாவது அரசு பரிசிலனை செய்து முடிவு எடுக்க முடியும் என்றால் இந்த அரசு அதை கருணையோடு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் இலவச மின்சாரம் வழங்கியிருக்கிறோம். இந்தக் கோழிப் பண்ணையை பெண்கள்தான் அதிகமாக வைத்து வளர்க்கிறார்கள். அதிலே ஆண்கள் தலையிடுவதில்லை. அதாவது பெண்கள் வளர்க்கின்ற இந்த கோழிப் பண்ணைக்கு எவ்வளவு மின்சாரம் செலவழிந்துவிடும் ? மிகக் குறைந்த அளவிலே தான் மின்சாரம் அதற்கு கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையால் இந்த கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களுக்கு ஆயிரம் கோழிக்கு கீழே வைத்து வளர்க்கக் கூடியவர்களுக்கு எல்லாம் இந்த மின்சாரம் இனாமாக வழங்குவதற்கான ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். நாம் ஒவ்வொன்றையும் சிறிதாக இருக்கிறது அளவு குறைவாக இருக்கிறது என்று ஒவ்வொரு துறையிலும் மின்சாரத்திற்கு சலுகை செய்துகொண்டே போனால் இருக்கின்ற இழப்புகளோடு அதிகமான இழப்புகளை இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். நான் ஏற்கனவே அதைத்தான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இதிலே மொத்தமாக எத்தனை பண்ணைகள் வைத்து இருக்கிறார்கள். அதிலே எவ்வளவு கரண்ட் உபயோகிக்கிறார்கள். அதிலே, எவ்வளவு தேவைப்படுகிறது, எவ்வளவு அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதை எல்லாம் முழுமையான பரிசீலனை செய்து எடுத்ததற்குப் பின்னாலேதான் இப்படிப்பட்ட மன்றங்களிலே அறிவிக்க முடியும். ஆகவே நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல இது சம்பந்தமான ஒரு அறிக்கையை தமிழ்நாடு மின்சார வாரியத்திலே பெற்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் ஒன்று சேர்த்து அதற்கென்று ஒரு முடிவினை எந்த அளவிலே எடுக்கலாம் என்பதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 29, திருமதி கே. பஞ்சவர்ணம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ப. கலியபெருமாள் கேட்கிறார். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.